# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 13 திங்கட்கிழமை 29.07.2024 கதிர் 315







# நீதிமன்றத் தீர்ப்பை நாடாளுமன்றம் ஏற்காமையானது ஒரு தவறான முன்னுதாரணமாக அமைந்து விடலாம்!

## மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

உச்ச நீதிமன்ற தீர்ப்பை நாடாளுமன்றம் ஏற்காமையானது ஒரு தவறான முன்னுதாரணமாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்கால முன்னேற்றம் கருதி நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறையின் மூன்று நிறுவனங்களும் சமநிலையில் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடாளுமன்றம் ஏற்காமையானது சட்டத்தின் ஆளுமைக்கு விடுக்கப்பட்ட சவாலாகவே கருதப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

2➤





## தேர்தல் காலத்தின் போது மாகாணங்களின் பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிகாரங்கள்!

எதிர்வரும் தேர்தல் காலப்பகுதியில் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு பொலிஸ் தலைமையகம் அந்தந்த மாகாணங்களின் பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

அதுமட்டுமின்றி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான பாதுகாப்பு தொடர்பிலான பொறுப்பு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள பாதுகாப்பு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

2➤

## சட்ட விரோதமான அனுமதியற்ற மருந்து வகைகளின் பாவனை தொடர்கின்றது!

### மருத்துவர்கள் சங்கக் கூட்டமைப்பு எச்சரிக்கை

சட்ட விரோதமான அனுமதியற்ற மருந்து வகைகள் நாடு முழுவதும் தொடர்ந்தும் பாவனையில் உள்ளதாக மருத்துவம் மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் விநியோகஸ்தர்களை பதிவுசெய்யும்முறைசெயல்படாததால், நாடு முழுவதுமுள்ள அரச மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருந்தகங்களில் பதிவு செய்யப்படாத மருந்துகள் புழக்கத்தில் உள்ளதாக மருத்துவர்கள் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் ஜி.ஜி.சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, மீண்டும் தரம்



குறைந்த மருந்துகளின்பயன்பாடு அல்லது மருந்துகள் தொடர்பான மோசடிகள் தீவிரமாக அதிகரித்து வருவதாக மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையை

2➤

## ஜனாசா எரிப்பு விவகாரம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்து

நாட்டிலுள்ள ஓர் இனத்தையும் மதத்தையும் இலக்கு வைத்து, அதன் பாரம்பரியங்களுக்கு எதிராக முட்டாள்தனமான முடிவுகளை மேற்கொண்டவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும், என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 383 ஆவது நிகழ்வு பாணந்துறை, ஜீலான் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், ஓர் இனத்தையும், மதத்தையும் இலக்கு வைத்து, நாட்டின் ஆட்சியாளர்கள் எடுத்த கீழ்த்தரமான முடிவுகளால் குறிப்பிட்டதொரு சமூகத்தினர் பாதிக்கப்பட்டனர்.

அண்மையில் இதற்கு ஆட்சியாளர்கள் மன்னிப்பும் கேட்டனர். நல்ல விடயம் தான். ஆனால், ஓர் இனத்தையும், ஒரு மதத்தையும் குறிவைத்து எடுக்கப்பட்ட அர்த்தமற்ற முடிவுகளால்

2➤

## தபால் மூல வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தப்படவேண்டும் என அறிவிப்பு!

2024 ஜனாதிபதித் தேர்தலின் தபால் மூல வாக்காளர்களின் பெயர்ப்பட்டியலைக் காட்சிப்படுத்த வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரே மாதிரியான பெயர்கள் இருப்பின் தமது தகவல்களை வேறு ஒருவர் ஊடாகச் சரிபார்த்து, அதன்பின்னர் தபால் வாக்களிப்பு விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதைத் தவிர்க்குமாறு தபால் மூல வாக்காளர்களிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை

2➤

## பதவி துறந்தார் நீதி அமைச்சர் விஜயதாஸ!



நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அமைச்சுப் பதவியைத் துறந்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாலேயே தான் இந்த முடிவை எடுத்ததாக அவர் அறிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

**ஜனாசா.....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு, வலுக்கட்டாயமாக தகனம் செய்த கீழ்த்தரமான செயலுக்கான இழப்பீட்டை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும்.

இல்லையேல் இந்த ஆண்டு இறுதிக்குள் அதனை வழங்க நான் நடவடிக்கை எடுப்பேன்.

முட்டாள்தனமான முடிவுகளை எடுத்தவர்கள் மீது சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

ஸ்மார்ட் சமூகம் இவ்வாறான முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கும் குடிமக்களை உருவாக்காது.

பாலஸ்தீன மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையில் தெளிவான நிலைப்பாட்டில் நான் இருக்கிறேன். இஸ்ரேலும் பாலஸ்தீனும் நல்லிணக்கத்துடனும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும். பாலஸ்தீன மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் இழிவான செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மனித நேயத்திற்கு முதலிடம் வழங்க வேண்டும். அதன் மூலம் உலக சமாதானத்தை ஏற்படுத்த முடியும், என்று சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (04)

**சட்டவிரோதமான....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் பதிவு செய்யப்பட்ட மற்றும் தரம் கூடிய மருந்துகளின் பாவனையை மேம்படுத்துவதற்கு மருந்துகளை வழங்கும் விநியோகஸ்தர்களை பதிவு செய்யும் பொறிமுறையானது வினைத்திறனுள்ளதாக்கப்பட வேண்டுமெனவும் மருத்துவர் சமல் சஞ்சீவ மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெஜ-73)

**தேர்தல்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி பாதுகாப்பு ஏற்பாட்டின் கீழ் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், இந்த தேர்தலுக்காக நாடு முழுவதும் அதிகபட்ச பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெஜ-71)

**நீதிமன்றத்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளை புறக்கணிக்கும் இத்தகைய போக்கினால் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லாத ஒரு தோற்றம் உருவாக்கப்படுவதுடன், நாட்டு மக்களும் அவ்வாறே நடக்கத் தொடங்கினால் எத்தகைய நிலை ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொலிஸ் மா அதிபரை நியமிப்பதிலும் அரசாங்கம் அரசியலமைப்பை மீறி தன்னிச்சையாக செயற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ள ரில்வின் சில்வா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னை ஒரு தாராளவாதியாக காட்டிக்கொண்டாலும், சர்வாதிகாரி போல் செயல்படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். அவர் ஹிட்லர் பாணியிலான ஓர் ஆட்சியாளர் எனவும் தெரிவித்துள்ளார்.

இப்படிப்பட்ட ஆட்சியாளர்களை பதவியிலிருந்து தூக்கி எறிவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பு எதிர்வரும் தேர்தலில் கிடைக்கவுள்ளது, அந்த வாய்ப்பானது இந்நாட்டு மக்களுக்கு கிடைக்கின்ற சிறந்தவொரு வாய்ப்பு எனவும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெஜ-70)

**தபால்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்காளர் பெயர்ப்பட்டியல் காட்சிப் படுத்தப்பட்டுள்ள இடங்களிலும் மாவட்ட தேர்தல் காரியாலயங்களிலும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பங்களைப் பெற முடியும் என்பதுடன், தபால் மூல வாக்களிப்புக்கு தகுதியான அனைவரும் விண்ணப்பங்களை ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பிவைக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (04)

# தடுகம் ஓயாவிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிதிகொட பகுதியில் தடுகம் ஓயாவில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று சீதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 45 முதல் 50 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் 5 அடி 10 அங்குலம் உயரம் உடையவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம், நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# விண்வெளியில் சிக்கியுள்ள இருவரும் ஓஸ்டில் பூமிக்குத் திரும்பி வருவார்கள்!

## நாசா ஆய்வு நிறுவனம் அறிவிப்பு

விண்வெளியில் 52 நாட்களாக சிக்குண்டுள்ள சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இரண்டு விண்வெளி வீரர்களும், ஓகஸ்ட் மாதம் பூமிக்குத் திரும்பவுள்ளதாக நாசா அறிவித்துள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ், கடந்த ஜூன் 5 ஆம் திகதி புட்ச் வில்மோர் என்ற விண்வெளி வீருடன் விண்வெளிக்கு சென்றிருந்தார்.

அமெரிக்காவின் கேப் கனாவெரல் ஏவுதளத்தில் இருந்து புறப்பட்ட அவர்கள், ஜூன் 7 ஆம் திகதி சர்வதேச விண்வெளி மையத்தை அடைந்திருந்தனர். இருவரும் விண்வெளிப் பயணத்தை முடித்துக்கொண்டு கடந்த 13 ஆம் திகதி பூமிக்கு திரும்பும் வகையில் பயணத் திட்டம் அமைக்கப்பட்டிருந்தது.

எனினும், பயணத்திட்டம் திடீரென 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்ட பின்னர், அந்தத் திகதியிலும் அவர்கள் பயணிக்கவிருந்த விண்கலத்தில் ஏற்பட்ட தொழிநுட்பப் பிரச்சினை காரணமாக பூமிக்குத் திரும்புவதில் பிரச்சினை ஏற்பட்டது.

இவ்வாறு 52 நாட்களுக்கும் மேலாக சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இரண்டு விண்வெளி வீரர்களும், சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்குண்டுள்ளமையால், அவர்கள் எப்போது பூமிக்குத் திரும்புவார்கள் என்ற கேள்வி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இதுகுறித்து தற்போது கருத்து வெளியிட்டுள்ள நாசா, சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தோடு இணைக்கப்பட்டு இருக்கும் போயிங் விண்கலத்தின் ப்ளைட் கொன்ட்ரோலர் அடுத்தடுத்து சோதனை செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த சோதனை வெற்றி பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், விண்வெளி வீரர்களான புட்ச் வில்மோர் மற்றும் சுனிதா வில்லியம்ஸ் ஆகியோர் சோதனையின்போது ஸ்டார்லைனரின் கலிப்சோ எனப்படும் கப்ஸ்யூலுக்குள் அமர்ந்து தகவல்களை வழங்கியதாக போயிங் நிறுவனமும் தெரிவித்துள்ளது.

போயிங் விண்கலத்தில் ஏற்பட்ட ஹீலியம் கசிவு சரிசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் ஓகஸ்ட் மாதத்தில் எப்போது வேண்டுமானாலும் பூமிக்குத் திரும்பலாம் எனவும் நாசா தெரிவித்துள்ளது. (04)

# பாயவேண்டிய நேரத்தில் மக்களுக்காகப் பாய்வோம்!

## வீ. இராதாகிருஸ்ணன் எம்.பி

*மலையகமக்களின் உரிமைசார் விடயங்களில் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. பாய்வதற்காகவே நாம் பதுங்கி வருகிறோம். பாயவேண்டிய நேரத்தில் மக்களுக்காக நிச்சயம் பாய்வோம், என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.*

*மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு மற்றும் மலையக மக்களுக்கான காணி உரிமை உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி ஹட்டனில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (04)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வடக்கின் மாற்றுத் திறனாளிகளுக்கான இசைப் போட்டி சிறப்புற நடைபெற்றது





கனடா புதிய வாழ்வு நிறுவனத்தின் ஆதரவுடன், நல்லூர் சாவிகா சங்கீத அறிவாலயம் நடத்திய வடக்கின் மாற்றுத்திறனாளிகளுக்கான இசைப் போட்டி கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சாவிகா சங்கீத அறிவாலய இயக்குநர் ஸகிஸ்ணா ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி முனைவர் கமலநாதன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், ஆனைப்பந்தி மெ மி த க பாடசாலை அதிபர் ஜெகானந்தம், புதிய வாழ்வு நிறுவன இணைப்பாளர் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்

நிகழ்வில் நடுவர்களாக சாரங்கம் நுண்கலை மன்ற இயக்குனர் வாசஸ்பதி ராஜீந்திரன், ஓய்வு பெற்ற விரிவுரையாளர் விக்னேஸ்வரி நரேந்திரா, விரிவுரையாளர் நீ. பரந்தாமன், இசைக்கலைஞர்களான ர. சுரசாகித்யன், நிரோஷன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுவலுவுடைய பிள்ளைகள் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

# புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் பனம்பொருள் கைப்பணி உற்பத்திகள் ஊக்குவிப்புப் பயிற்சி நெறி



(வி.ரி. சகாதேவராஜா)

புலம்பெயர் உறவுகளின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட சங்கமன் கிராமத்தில் பனம் பொருள் கைப்பணி உற்பத்திகள் மூலமாக வாழ்வாதாரத்தினை உயர்த்தும் பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கமன் கிராமத்தில் 40 பயனாளர்களுடன் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் ஏற்பாட்டிற்கமைய இவ்வாழ்வாதாரப் பயிற்சிநெறியானது நடைபெறுகின்றது.

இதேபோன்று ஏனைய சில கிராமங்களிலும் இத்தகைய பயிற்சி நெறி எதிர்காலத்தில் ஆரம்பிக்கபடவுள்ளது.

இவ்வாழ்வாதாரப் பயிற்சிநெறியானது 2 மாத கால எல்லையினைக் கொண்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.




# நிந்தவூர் அல் அஸ்றக் பூப்பந்தாட்ட அணிகள் தேசியமட்டத்திற்கு தெரிவு



நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 16,18 மற்றும் 20 வயது பூப்பந்தாட்ட அணிகள் வரலாற்றுச் சாதனையுடன் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளன.

கடந்த 25, 26, 27 ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணப்பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்டப் பூப்பந்தாட்டப் போட்டிகள் திருகோணமலை மெக்கெய்சர் உள்ளக விளை யாட்டரங்கில் இடம்பெற்றன.

இதில் பங்குபற்றிய நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசியப் பாடசாலையின் 16 மற்றும் 20 வயது பிரிவு பூப்பந்தாட்ட அணிகள் இரண்டும் சம்பியன்களாகவும், 18 வயது பூப்பந்தாட்ட அணி மூன்றாம் இடத்தையும் வென்று வரலாற்றுச்சாதனையுடன் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளன.

# ஆசியக் கிண்ண மகளிர் கிரிக்கெட் தொடர் சாதனை வெற்றியைப் பெற்றது இலங்கை!




சமரி அத்தபத்து மற்றும் ஹர்ஷிதா சமரவிக்ரம ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் இலங்கை மகளிர் அணி முதல் முறையாக மகளிர் கிரிக்கெட் ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மகளிருக்கான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இந்திய அணியை 8 விக்கெட்டுகளால் வீழ்த்தியது இலங்கை அணி.

இதற்கு முன்னர் ஐந்து முறை (2004, 2005, 2006, 2008 மற்றும் 2022) ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர்களில் இறுதிப்போட்டி வரை வந்து இரண்டாம் இடத்தைப் பெற்ற இலங்கை மகளிர் அணி, சம்பியன் பட்டத்தை வென்றது இதுவே முதல் தடவையாகும்.

ரங்கிரி தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிப்பெற்ற இந்திய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது. மந்தனா 60, ஜெமிமா ரோட்ரிக்ஸ் 29 ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர்.

இலங்கை மகளிர் அணியின் கவிஷா டில்ஹாரி 2 விக்கெட்டுகளையும், உதேஷிகா ப்ரபோதானி, சச்சினி நிசன்சலா, சமரி அத்தபத்து ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை மகளிர் அணிக்கு விஷ்மி குணரட்ன ஒரேயொரு ஓட்டத்துடன் விக்கெட்டை இழந்து ஏமாற்றம் அளித்தார்.

பின்னர் ஜோடி சேர்ந்த சமரி அத்தபத்து - ஹர்ஷிதா சமரவிக்ரம ஆகிய இருவரும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையையும் உயர்த்தினர். இருவரும் அரைச் சதங்களையும் பெற்றனர்.

இரண்டாவது விக்கெட்டிற்கு 87 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பெற்ற நிலையில், 61 ஓட்டங்களை எடுத்திருந்த சமரி அத்தபத்து ஆட்டமிழந்தார். அவரைத்தொடர்ந்து களமிறங்கிய கவிஷா டில்ஹாரியும் அபாரமாக விளையாட இலங்கை அணியின் வெற்றி உறுதியானது.

இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ஹர்ஷிதா சமரவிக்ரம 6 பௌண்டறிகள், 2 சிக்ஸர்கள் இடங்கலாக 69 ஓட்டங்களையும், கவிஷா டில்ஹாரி 30 ஓட்டங்களையும் சேர்த்து அணிக்கு வெற்றியைத் தெடிக்கொடுத்தனர்.

18.4 ஓவர்களில் இலக்கை எட்டிய இலங்கை மகளிர் அணி, 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய மகளிர் அணியை வீழ்த்தி, மகளிர் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக சம்பியன் பட்டத்தையும் வென்றது.

மகளிர் ஆசியக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை இந்தியாவைத் தவிர்த்து பங்களாதேஷ் மட்டுமே ஒருமுறை கிண்ணத்தை வென்றிருந்தது. தற்போது இலங்கை அணி மூன்றாவதாக மகளிர் ஆசிய கிண்ணத்தை வென்றுள்ளது.

இதுவரை நடைபெற்ற 9 மகளிர் ஆசியக் கிண்ணத் தொடர்களில் இந்தியா ஏழு முறையும், பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகள் தலா ஒரு முறையும் வெற்றி பெற்றுள்ளன. இறுதிப் போட்டியின் ஆட்டநாயகி விருதை ஹர்ஷிதா சமரவிக்ரம தட்டிச் செல்ல, தொடர் நாயகி விருதை சமரி அத்தபத்து பெற்றுக்கொண்டார். (04)

# இலங்கையுடனான ரி-20 தொடரை கைப்பற்றியது இந்திய அணி!



*இலங்கை, இந்திய அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் இரண்டாவது போட்டியில் இந்தியா 7 விக்கெட்டுக்களால் டக்வெர்த் லூயிஸ் முறையில் வெற்றி பெற்று, மூன்று போட்டிகள் கொண்ட தொடரினையும் இன்னும் ஒரு போட்டி மீதமிருக்க 2-0 எனக் கைப்பற்றியுள்ளது.*

*நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் சூர்யகுமார் யாதவ், இலங்கை அணியை முதலில் துடுப்பாட அழைத்தார்.*

*அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. குசல் பெரேரா அதிகபட்சமாக தன்னுடைய 53 ஓட்டங்கள் எடுத்தார்.*

*இந்திய அணியின் ரவி பிஷ்னோய் 3 விக்கெட்டுக்களையும் அர்ஷ்தீப் சிங், ஹர்திக் பாண்டியா மற்றும் அக்ஷர் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பின்னர் 162 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை அடைய களமிறங்கிய இந்திய அணி, தமது துடுப்பாட்டத்தினை ஆரம்பித்தபோது மழை குறுக்கிட்டது.*

*பின்னர் மழை காரணமாக போட்டியின் வெற்றி இலக்கு 8 ஓவர்களுக்கு 78 ஓட்டங்கள் என டக்வெர்த் லூயிஸ் முறையில் தீர்மானிக்கப்பட, குறித்த வெற்றி இலக்கை இந்திய அணி 6.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து அடைந்தது.*

*இந்திய அணியின் யஷஷ்வி ஜெய்ஸ்வால் 30 ஓட்டங்களையும், சூர்யகுமார் யாதவ் 26, ஹர்திக் பாண்டியா ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும் எடுத்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் ரவி பிஷ்னோய் தெரிவானார்.*

*இரு அணிகளுக்கும் இடையிலான இந்த ரி-20 தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நாளை (30) நடைபெறவிருக்கிறது. (04)*



# அட்டாளைச்சேனை பிரதேச செயலக சிறு முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பு





(எம் எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு ஆனைை கயசை நிகழ வானது இன்று 2024.07.29 ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலக புசநநெ ீயசம வளாகத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர் ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வின் போது கணக்காளர்,

உதவித்திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இங்கு தொழில் முயற்சியாளர்களின் பொருட்களை கொள்வனவு செய்வதன் மூலம் அவர்களது தொழிலினை எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்கு உதவியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# யாழ். இந்து '08' பிரிவு மாணவர்களால் உதவி



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 2008ஆம் ஆண்டு பிரிவு - பழைய மாணவர்களால் - திருநெல்வேலியிலுள்ள சிறுவர் இல்லத்துக்கு கடந்த சனிக்கிழமை (27) உதவி வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில், 2008ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரம் கற்ற மாணவர்கள், 'மீண்டும் பள்ளிக்குச் செல்வோம்' என்னும் தொனிப்பொருளில் தமது ஒன்றுகூடலை, யாழ். நகரிலுள்ள விடுதியில் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தியிருந்தனர்.

இதன்போது தமக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் மதிப்பளித்திருந்தனர்.

ஒன்றுகூடலின் ஓர் அங்கமாக சமூகநலத் திட்டமும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக திருநெல்வேலியிலுள்ள கருணாலயம் பெண்கள் சிறுவர் இல்லத்தின் கோரிக்கைக்கு ஏற்ப ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆடைகள் வழங்கப்பட்டன. அத்துடன் சிறுவர் இல்லத்துக்கு மதியபோசனத்துக்கு 50,000 ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் இ.செந்தில்மாறன் பங்கேற்றிருந்தார். அவர் உத்தியோகபூர்வமாக ஆடைகளை, இல்லத்தினரிடம் கையளித்ததுடன், 2008ஆம் ஆண்டுப் பிரிவு மாணவர்களால் சிறுவர் இல்லப் பிள்ளைகளிடம் அவை ஒப்படைக்கப்பட்டன.

இந்துக்கல்லூரி அதிபர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு, பாடசாலை மாணவிகளின் சுயகற்றலுக்குத் தேவையான உதவிகள் வழங்குவதாகக் கூறியதுடன், பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். (01)




# ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் வட்டம் நடாத்திய சேவை நலன் பாராட்டு விழாவும் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பும்!



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வட்டம் நடாத்திய சேவை நலன்பாராட்டு விழாவும் கல்வி சாதனையாளர்கள் கௌரவிப்பு விழாவும் நேற்று (28) ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசிரியர் எம்.ஏ.எம்.றக்கீப் தலைமையில், சம்மாந்துறை வலய ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் இசட்.எம்.றிஸ்வி ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், 34 வருடங்கள் கல்வி சேவையாற்றி ஓய்வு பெற்ற சம்மந்துறை வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.கபூர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

கல்விச் சாதனையாளர்கள் பாராட்டு நிகழ்வில் சம்மாந்துறை வலயத்தில் 25 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வெள்ளிவிழாக் கண்ட ஒரே ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளரும் சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத் தலைவருமான விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும், கல்வி சேவையாற்றிய முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம்.ஏ.சபூர்தம்பி, மறைந்த ஆசிரிய ஆலோசகர் அசீஸ்( இறக்காமம்), பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம் .வை. அரபாத் முகைடீன், ஏ.எல்.மஜீத், எம்.என்.நாசீர் அலி மற்றும் ஆசிரியர் வளநிலைய முகாமையாளர் எஸ்.சிவேந்திரன் ஆகியோரும் நினைவுச் சின்னம் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

மேடையில் முன்னிலை அதிதியாக கலந்து கொண்ட ஆசிரிய ஆலோசகர் றிஸ்வி செயின் விழா பற்றி விரிவாக எடுத்துரைத்தார் .

பாராட்டுப் பெற்ற அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன. சேவை நலன் பாராட்டைப் பெற்ற ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கபூர் ஏற்புரை வழங்கினார்.

சுமார் 300 ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், வலயக்கல்விப் பணிமனையின் கல்விசார் உத்தியோகத்தர்கள், அதிபர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள்.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராய அதிகாரிகளுடன் ஆணைக்குழு சந்திப்பு

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக அடுத்த சில தினங்களில் தேர்தல் ஆணைக்குழு மாவட்ட தேர்தல் அதிகாரிகள்மற்றும்தேர்தல்ஆணைக்குழு அதிகாரிகளை சந்திக்க உள்ளது.

இச்சந்திப்பு ராஜகிரிய தேர்தல் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. தேர்தல் அதிகாரிகளை சந்தித்த பின்னர் அனைத்து அரசியல் கட்சி செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், அரச அதிகாரிகள் மற்றும் கட்சி செயலாளர்களை ஆணைக்குழு சந்திக்கின்ற முதல் சந்திப்பாக இது அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ரெஜ-74)



# சிவில் அமைப்புக்கள் சார்பாக ஜனாதிபதி வேட்பாளரொருவர் போட்டியிடவுள்ளார்

எதிர்வரும்ஜனாதிபதித் தேர்தலில் சிவில் அமைப்புக்கள் சார்பாக வேட்பாளரொருவரை போட்டியிடச் செய்யவுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

முப்பதுக்கும் மேற்பட்ட சிவில் அமைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும்ஜனாதிபதி வேட்பாளர்தொடர்பிலிலும் மற்றும் தமது வேலைத்திட்டம் தொடர்பிலும் எதிர்வரும் வாரத்தில் மக்களுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அமைப்பின் தலைவர் ஜமுனி கமந்த துஷார தெரிவித்துள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறும் வேட்பாளர்கள், இந்நாட்டு மக்கள் வசதியாக வாழக்கூடிய வகையிலான அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவது தொடர்பிலோ தமது தெளிவான கொள்கை மற்றும்வேலைத்திட்டம்தொடர்பிலோ எதனையும்சரிவர முன்வைக்கவில்லை. எனவே இலஞ்சம், ஊழல், வீண் விரயம், முறைகேடுகளை ஒழிக்கக்கூடிய கொள்கை பற்றுள்ள தலைவர் ஒருவரை தமது வேட்பாளராக முன்வைக்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ரெஜ-72)











## யானையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனைக் கிராமத்தில் யானை தாக்கியதில் சில குடும்பங்களின் வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டன.

அரசாங்க சுற்று நிருபத்திற்கு அமைய அரச நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவாக வனப் பரிபாலன திணைக்களத்தினால் நேற்று (28) அக்குடும்பங்களுக்கான காசோலைகள் வழங்கப் பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக அனர்த்தப் பிரிவினால் அபிவிருத்தி உத்தியோகத்தர் பங்கு பற்றலுடன் பிரதேச செயலாளர் பீ.டி.எம். இர்பான் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் கெ.வி.சலீம் ஆகியொரால் அந்தக் காசோலைகள் சேதமடைந்த வீட்டுரிமையாளர்களிடம் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.




## 50,000 பட்டதாரிகளை அரச சேவைகளில் சேர்ப்பது தேர்தலை இலக்காகக் கொண்டது

### தேர்தல் ஆணைக்குழுவிடம் ப∴பரல் அமைப்பு முறைப்பாடு

2020 ஆம் ஆண்டு முன்னைய அமைச்சரவையினால் 50,000 பட்டதாரிகளை அரச சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் அவசர அமைச்சரவைப் பத்திரம் சில நாட்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டது.

குறித்த அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம், பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு மாகாண ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ இந்த அமைச்சரவைப் பத்திரத்தில் நிதியமைச்சர் என்ற ரீதியில் கையொப்பமிட்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானம் 4 வருட காலமாக கவனத்திற் கொள்ளப்படாமல் இருந்த நிலையில், தற்போது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அதனை அமுல்படுத்துவதாக கூறி, 50,000 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்குவதானது, தேர்தலை இலக்காகக் கொண்டதாக இருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவிடம் பஃபரல் அமைப்பு முறையிட்டுள்ளது.

இது தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தேர்தல் ஆணைக குழுவிடம் அந்த அமைப்பு கேட்டுக கொண்டுள்ளது. (ரெஜ-75)





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.07.2024இல் வெளியிடப்பெற்றது.